



- வாழ்வோம்

## பேரறிஞர் அண்ணாவின் 5 நூல்கள்!

சீர் வாசகர் வட்டம் மற்றும் நன்செய் பதிப்பகம் இணைந்து, பேரறிஞர் அண்ணாவின் 'ஆரிய மாயை', 'கம்பரசம்', 'நீதிதேவன் மயக்கம்', 'பணத் தோட்டம்' மற்றும் 'தீ பரவட்டும்' ஆகிய ஐந்து நூல்கள் இந்த சிறப்புத் தொகுப்பாக ரூ.250 விலையில் வெளியிட்டுள்ளன.

திராவிட இயக்கத் சிந்தனைகளை எளிய வாசகர்களிடம் கொண்டுசேர்க்கும் நோக்கில், இந்த நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அண்ணாவின், 'ஆரிய மாயை' மற்றும் 'கம்பரசம்' ஆகிய நூல்கள் வழியாக, ஆன்மிகம் மற்றும் காவியங்களின் பெயரால் எளிய மக்கள் மீது திணிக்கப்பட்ட மூடநம்பிக்கைகளையும் சாதிய மேலாதிக்கத்தின் வேர்களையும் அக்குவேறு ஆணி வேறாக உடைத்துக் காட்டும். 'பணத் தோட்டம்' நூல், முதலாளித்துவச் சுரண்டலையும் சாதிய ஒடுக்கு முறையையும் எடுத்துக் காட்டி, வர்க்கப் போராட்டமும் சமூக நீதியும் எப்படி இணைந்து பயணிக்க வேண்டும் என்பதை எளிய பொருளாதார மொழியில் விளக்கியிருப்பார்.




சுயமரியாதை, சமூக நீதி மற்றும் இன உணர்வு மிக்க ஒரு முற்போக்குச் சமூகத்தை உருவாக்க திராவிட இயக்கத்தின் அடிப்படைப் பாடப்புத்தகங்களாக அண்ணாவின் எழுத்துகளை நாம் வாசிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!

SEERBOOKS.IN இணையதளம் வழியாக அல்லது 95663 31195 என்கிற எண்ணிற்குத் தொடர்புகொண்டு நூல்களை வாங்கலாம்.


## தமிழ் வணிக உலகம்!

*சங்ககாலம் முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையில் நடந்த உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வணிகம் பற்றியும் வர்த்தக நடைமுறைகள் பற்றியும், அச்சமயத்தில் நிலவிய சமூக - அரசியல் சூழல் பற்றியும் விவரிக்கிறது, கனகலதா முகுந்த் அவர்கள் எழுதிய 'THE WORLD OF TAMIL MERCHANT' எனும் நூல்.*

*சங்க இலக்கியங்களையும் இடைக்காலக் கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் பொருள்களை வைத்தே இந்நூலில் உள்ள அவதானிப்புகள் நிறுவப்பட்டுள்ளன. 'எழுத்துரு பெறாத வரலாற்றுக்கு முன்பிருந்தே இத்தகைய வணிகப் போக்குவரத்துகள் தமிழகத்தில் நிலவியிருக்கும்' என்கிறார், நூல் ஆசிரியர்.*

*'PER0IPLUS OF THE ERYTHRAEAN SEA' என்ற புத்தகம் சங்ககாலத்தில் நடந்த கிரேக்க வணிகத் தொடர்புகளை விவரிக்கிறது. 'யவனம்' எப்படி ஒரு திசைப் பெயராகப் பயன்படுத்தப்பட்டதோ, 'திராவிடம்' என்ற சொல்லும் தென் இந்தியாவைக் (குறிப்பாக தமிழ்நாட்டை ) குறிக்கும் திசைச் சொல்லே' என்கிறார், முனைவர் கே.ஆர்.எஸ். இங்குள்ள முக்கிய துறைமுகங்களும் (புகார், கொற்கை, தொண்டி) வணிகம் நடந்ததற்கு முக்கிய சான்றுகளாக இருக்கின்றன.*

*பல்லவர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் அரசின் உதவியுடன் வணிகம் நடைபெற்றுவந்தது. உள்நாட்டு வணிகம் அரசியல் நிலைத்தன்மையால் சிறப்பாக நடைபெற்றது. சந்தை வர்த்தகம் தடையின்றி நடைபெற சமூக அமைதி முக்கியம். அத்தகைய சமூக அமைதி உள்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்தன என்பதை, இடைக்கால பக்தி இலக்கியங்களும் விளக்குகின்றன. சோழர் காலத்தில் நடைபெற்ற படையெடுப்புகளின்மூலம் கடாரம், இலங்கை போன்ற பகுதிகளில் தமிழ் வணிகர்களின் நிரந்தர இடப்பெயர்வும் நடைபெற்றது.*




கௌதம் ராஜ்

படிப்பறை 132

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

*ஊர், ஊர் சபை, நாடு, கோட்டம், நகரம் போன்ற அமைப்புகள், வர்த்தகம் சிறப்புற நடைபெறுவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்களாகச் செயல்பட்டன. நகரமும் கிராமமும் இப்போதிருப்பதைப் போல முரண்பட்ட ஒன்றாக இல்லாமல் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஒன்றாகவே விளங்கின. நகரம் என்பது சந்தை வர்த்தகம் நடைபெறும் இடம் என்றளவிலேயே இருந்தது.*

*போர்கள் நடந்த சமயத்திலும் அரசியல் சூழல் நிலையற்றதாக இருந்த சமயத்திலும் அயல்நாட்டு வர்த்தகமும் உள்நாட்டு வணிகமும் தடைபடாமல் செயல்பட்டதற்குக் காரணம், வணிகர்கள் பெற்ற நன்மதிப்பே ஆகும். மன்னர்களும் வணிகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தினால், வர்த்தகத்திற்கு எவ்வித தடையும் இல்லாமலும் கூடுதல் வரி விதிக்காமலும் பார்த்துக்கொண்டார்கள். விஜயநகரப் பேரரசு காலத்திலும் 'சபை', 'ஊர்', 'நாடு', 'நகரம்' போன்ற அமைப்புகள் உறுதியுடன் இருந்ததை இதை வைத்துப் புரிந்துகொள்ளலாம்.*

*இப்படியாக இந்தப் புத்தகம் ஒரு பறவையின் பார்வையில் (BIRD'S-EYE VIEW) கடல் வணிகம் பற்றியும் உள்நாட்டில் நடந்த வர்த்தகம் பற்றியும் எளிமையாக விளக்குகிறது. தமிழ்ச் சமூகம் சந்தை வர்த்தகத்தில் கொண்ட ஈடுபாடுகளை இதன்மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.*

*உலகமயமாக்கல் என்பது தமிழ்ச் சமூகத்திற்கு நெடுங்காலமாகப் பழக்கப்பட்ட ஒன்றே. எதிர் காலத்திலும் அது தொடர்வது, நமது வளர்ச்சிக்கும் வளங்களுக்கும் வலு சேர்க்கும்.*

...வாசிப்போம்.

# 'திராவிடம்' சொல்லும் இயக்கமும்




**ராகுல் வெங்கட்ராமன், கும்பகோணம்.**

**'திராவிடம்' என்ற சொல்லும், 'திராவிட இயக்கம்' என்பதும், தற்போதைய நிலையில் நீர்த்துப்போன கருத்தாக - OUT DATED இயக்கமாக உள்ளதே?**

இறுகியிருக்கும் பனிமலை நீர்த்துப்போகும் போதுதான் வற்றாத ஆறாக ஓடி, வயல்வெளிகளில் வளம் சேர்க்கும். 'திராவிட இயக்கம்' என்பது, கெட்டிதட்டிப்போயிருந்த சாதிப் படிநிலைச் சமுதாயத்தை நீர்த்துப்போகச் செய்து, சமூக நீதி ஆறாக ஓடச்செய்த இயக்கம். காலங்காலமாக நம் மீதான பண்பாட்டுப் படையெடுப்பினால், அரசு - கோயில் - குடும்பம் என அனைத்து நிலையிலும் 'ஆரியம்' ஆக்கிரமிப்பு செய்திருந்ததை, எளிய மக்களும் உணரும்படி செய்ததில் திராவிட இயக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு.

'தமிழன்', 'தெலுங்கன்', 'கன்னடன்', 'மலையாளி' என்பது அவரவர் தாய்மொழி அடிப்படையிலான அடையாளம். மொழியால் இவர்கள் வேறுபட்டிருந்தாலும், ஆரியப் பண்பாட்டுத் திணிப்புக்கும் சமஸ்கிருத மொழிக் கலப்புக்கும் அனைவருமே அடிமைப்பட்டிருந்த நிலையில்தான், பண்பாட்டு விழிப்புணர்வையும் சமுதாயச் சீர்திருத்தையும் திராவிட இயக்கம் முன்னெடுத்தது. அதன் தாக்கம் இந்திய அளவில், 'மண்டல் கமிஷன்' மூலம் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கல்வி-வேலைவாய்ப்பை உறுதிசெய்தது.

திராவிடன் பதில்கள் 01

தற்போதைய நிலையில், சமூக நீதி என்பது விரிவான அர்த்தத்துடன் பாலின சமத்துவம், மனித உரிமை, சமச்சீரான வளர்ச்சி உள்ளிட்டவையும் இணைந்த இலக்குகளாக உள்ளன. எனவே, 'திராவிடம்' OUT DATED அல்ல. ஒவ்வொரு காலத்திற்குமான UPDATED கருத்தியல்.

**மு.அருள்ஜோதி, செம்பட்டி.**

**தி.மு.க.வில் இளைஞர்களுக்குப் பதவிகள் கிடைப்பது பெரும்பாடாக இருக்கிறது. பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. தேர்தல் தோல்விக்கு இவை முக்கியமான காரணங்கள் என்பதைக் கட்சித் தலைமை உணர்ந்திருக்கிறதா?**

தேர்தல் தோல்வி என்பது தி.மு.கவுக்குப் புதியதல்ல. தோல்வியிலிருந்து மீண்டு வந்து, மீண்டும் ஆட்சி அமைக்கும் வலிமையும் தி.மு.க.வுக்கே உண்டு என்பதுதான் வரலாறு. நீங்கள் சொல்வதுபோல, 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. ஆட்சியை இழந்ததற்கு ஓரிரு காரணங்கள் மட்டுமின்றி, நிறைய காரணங்களைத் தொண்டர்களே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். அவற்றில் இளைஞர்களும் பெண்களும் தி.மு.க.வில் எளிதில் உறுப்பினராகவும் முடியவில்லை, பதவிகளையும் பெற முடியவில்லை என்பதாகும். இந்தக் காரணங்கள் அனைத்தையும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே, தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்திலேயே வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, காலத்திற்கேற்ற சீரமைப்புகளைக் கழகத்தில் உருவாக்க வழிவகை செய்துள்ளார். இந்தியாவில் முழுக்க முழுக்க இளைஞர்களால் உருவாக்கப்பட்டு, 78 ஆண்டுகளாகச் செயல்படும் இயக்கம் தி.மு.க.தான். அதுபோல, ஒரு மாநிலக் கட்சியில் வலுவான கட்டமைப்புடன் இளைஞர் அணி உருவாக்கப்பட்டதும் தி.மு.க.வில்தான். 70 ஆண்டுகளுக்கு முன்பே தி.மு.க.வில் பெண்கள் பங்கேற்கும் வகையில், 'மகளிர் மன்றம்' உருவாக்கப்பட்டது. அது மகளிர் அணியாக வளர்ந்தது. காலச்சக்கரம் சுழல்கிறது. மறுபடியும் இளைஞர்களும் பெண்களும் உரிய பொறுப்புகளுடன் செயல்படும் வலிமையான இயக்கமாக தி.மு.கழகம் இருக்கும்.

***(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண் - 82204-51520)***

# ஃப்ளாஷ்பேக்



## பெருமை தரும் பொறுப்புகள்!

2001-இல் நான் தொப்பம்பட்டி ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்தபோது, திண்டுக்கல்லுக்கு வருகைதந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தேன். அதன்பிறகு, ஒருங்கிணைந்த ஒன்றிய அமைப்பாளர், ஒருங்கிணைந்த மாவட்டத் துணை அமைப்பாளராகவும் செயல்பட்டேன். மாவட்டம் பிரிந்ததற்குப் பிறகு, திண்டுக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தொடர்ந்து, 26 ஆண்டுகள் இளைஞர் அணியில் பணியாற்றிவருவது மிகுந்த பெருமையாக இருக்கிறது.



**- எஸ்.ஹரிஹரசுதன்,**
**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,**
**திண்டுக்கல் மேற்கு.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900